# சைவ சித்தாந்தம் உணர்த்தும் வீடுபேறு அடைவதற்கான வழிகள்

ர. நித்யா
நேரு, கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையம்பாளையம், கோவை

## முன்னுரை

பாசத்தினின்றும் நீங்கிப் பதியினை அடையும் வழிகள் சாதனங்கள் எனப் பெயர்பெறும். அவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"சைவ சமய மேசமயம்
சமயம் தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
காட்டும்இந்தக் கருத்தை விட்டு
பொய்வந் துழலும் சமயநெறி
புகுத வேண்டா் முத்திதரும்
தெய்வ சபையை காண்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே

இப்பிறப்பில் மனிதன் வீடுபேறு அடைவதற்கான வழிமுறைகளைச் சைவசித்தாந்த நோக்கில் கூற விழைகிறேன். சைவ சமயத்தின் சிறப்பு, சைவம் காட்டும் சிவநெறி கோட்பாடுகளின் உண்மைகளையும் அவ்வழியே ஞானம் வருவதற்குரிய சில அடிப்படை படிநிலைகளையும் தெளிந்து உணர்ந்தப் பின், வீறுபேறு அடைவதற்கான வழிமுறைகள் இக்கட்டுரையில் மிகச் சிறப்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## சைவ சமயம்

சிவாகமத்தில் பெறப்படுவதாகிய நெறி "சைவ சமயம்" எனப்படும். இந் நெறி நான்கு. இவை சரியை, கிரியை, யோம், ஞானம் என்று வழங்கப்பெறும். இவற்றையே நற்றமிழில் கூறும்போது சன்மார்க்கத்தை நன்னெறி என்றும், சகமார்க்கத்தை தோழமை நெறி என்றும், சற்புத்திர மார்க்கத்தை மகன்மை நெறி என்றும், தாத மார்க்கத்தைத் தொண்டு நெறி என்றும் வழங்குவர். முத்தியாகிய பெரும் பயனுக்கு ஞானம் ஒன்றே வாயிலாகும். ஏனைய பலவும் ஞானத்தை அடைவதற்கு வழியேயன்றி, நேரே வாயிலவன அல்ல என்பது ஈண்டு அறியப்பெறும். வேள்வி, தானம், பிறகருமங்கள், செபம், தீக்கை,

முதலிய எவையாயினும் அவையெல்லாம் ஞானத்தைத் தந்து, பின் அதன் மூலம் முக்தியை நல்குமேயன்றி, அவை நேராக முக்தியைத் தருவதில்லை.

"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே"

என்ற தாயுமான அடிகளின் அருள்வாக்காலும் அறியலாம்.

### ஞானத்தின் சிறப்பு

முத்தி,மோட்சம்,வீடுபேறு என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும். இந்த நிலைக்கு மறுதலையான நிலை பந்தம், அல்லது தளை ஆகும். அஞ்ஞானத்தால் உயிர்கள் தமது அறிவு விழைவு செயல்கள் செயற்படாமல் நிற்பதே பந்தம் ஆகும். அந்தக் கட்டிலிருந்து விடுபடுவதே வீடு அல்லது மோட்சம் என்பதாகும். அஞ்ஞானம் இருள் போன்றது . ஒளி வந்தாலின்றி இருள் நீங்காதன்றோ? அதுபோல் ஞானம் வந்தாலின்றி அஞ்ஞானம் நீங்காது. இதை சித்தியாரின் ஒரு செய்யுளிலும் அறியலாம். இதனையே தாயுமான அடிகளும்,

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று குறிப்பிடுகிறார்.

### ஞானம் வருவதற்குரிய வழிகள்

ஞானம் வருவதற்குரிய சில அடிப்படையான படிநிலைகள் உள்ளன. அவை:

### வேட்கை

ஞானம் வருவதற்கு முதற்கண் அந்த ஞானத்தைப் பெறுதலில் வேட்கை -அவா உண்டாதல் வேண்டும். பசியற்றவனுக்கு உணவு பயன் தராது நீர் வேட்கை இல்லாதவனுக்கு நீர் பயன் தராது இங்ஙனமே ஞான வேட்கை இல்லாதவனுக்கு ஞானம் பயன்படாது.

### மலபரிபாகம்

ஆணவ மலத்தையே மலபரிபாகம் என்பர். செம்பினிற் களிம்புபோல் உயிருடன் அநாதியே கலந்திருக்கும் இம்மலம் உயிருக்கு ஞானத்தில் வேட்கை எழாதபடி அவற்றின் அறிவைத் தடுத்து வைத்திருக்கும். இந்த ஆணவ மலம் என்பது அழிவதில்லை என்பதை அறிவோம்.

### இருவினையொப்பு

மனிதனுக்கு நேரிடும் இன்ப துன்பங்கள் வினைப்பயனால் நேரிடுகின்றன. இதனை அறியாது இன்பம் வருங்கால் அவன் எக்களிப்படைவதும், துன்பம் நேருங்கால் அளவுக்கு மீறி மனம் ஒடுங்குவதும் அவன் இயல்புகளாகப் உள்ளன. இதனை நினைந்து திருவள்ளுவர்,

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்?

என்று பரிதாபப்படுகிறார். மேற்கூறியவாறு ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டே அதற்கு அதன் மறுதலைப் பொருளாகிய கன்மம், மாயை என்பவற்றை உயிர்களுக்கு கூட்டுகின்றான் இறைவன். இவற்றின் பயனாக உயிர்கள் இன்ப துன்பங்களை நுகர்கின்றன.

**சத்திநிபாதம்**

இருவினை யொப்பு நிகழ்ந்த பிறகு சத்தி நிபாதம் உண்டாகும். திரோதானமாய் நின்று மறைப்பைச் செய்து வந்த இறைவனது சக்தி மலரிபாகம் உற்ற நிலையில் அருட்சக்தியாக மாறி ஆன்மாவிடத்தில் பதிதலே "சத்தி நிபாதம்" என்பது. நிபாதம்-வீழ்ச்சி இதன் வழி உலகியலில் உயிர்கள் தீயன செய்யாது நல்லன செய்யக் கருதுதல் சத்திநிபாதம் வழி நிகழ்வதேயாகும்.

**தவம்**

சந்ததி பாதஹ்தின் விளைவாகும். சிவபெருமானை நோக்கிச் செய்யும் செயல்களே தவத்தின் பாற்படும். "சிவத்தை பேணின் தவத்திற்கு அழகு" என்ற ஔவைப்பாட்டியின் வாக்கையும் ஈண்டுச் சிந்திக்கலாம். தவத்தோர் எனப்படும் துறவியர் செயலாகிய கடவுள் வழிபாடே "தவம" என்பதாகும். துன்பத்தை நீக்கி இன்பத்தை அடைவதற்கே தவம் செய்கின்றனர். இன்பம் துன்பம் எல்லாவற்றிலும் மிகப்பெரிய இன்பம் வீடுபேறு எய்துதல் முட்தி இன்பம் அடைதலே சிறந்த தவமாகும்.

**முடிவுரை**

சைவ சித்தாந்தம் உணர்த்தும் வீடுபேறு அடைவதற்கான வழிகள் கூறும் இக்கட்டுரையில் ஞானம் வருவதற்குரிய சில அடிப்படையான படிநிலைகளை விளக்கி இதன் மூலம் வீடுபேறு அடைவதற்கான வழிமுறை தெளிவாக விளக்கும் வகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.